RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-22249

OPEN ACCESS

# சுளுந்தீ புதினத்தில் சிறுதெய்வ வழிபாடு

**பா. இராஜேஷ் [அ, *], வ. நாராயண நம்பி [அ]**

[அ] தமிழ்த்துறை, தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி-620023, தமிழ்நாடு, இந்தியா

# Worship of Minor Deities in Chulunthee Novel

**P. Rajesh [a, *], V. Nambi Narayan [a]**

[a] Department of Tamil, Thanthai Periyar Government Arts & Science College (Autonomous), (Affiliated to Bharathidasan University), Tiruchirappalli-620023, Tamil Nadu, India

* Corresponding Author: rajeshnetjrf2022@gmail.com

Received: 27.09.2022
Revised: 01-11-2022
Accepted: 06-11-2022
Published: 01-12-2022

Check for updates

## ABSTRACT

Novel Chulunthee uncovers the hidden human history of Navidar clan, a traditional craftsman, and their medical contributions based on ethnographic data. Also, it has recorded the characteristics of various castes like Kudumbar, Kallar, Nayak, Asari, Mutharaiyar, Chettiar, Vannar, Gowda and Idiyar. The novel also mentions the period of Vaetuvakula king who ruled over Pantrimalai (Kodaikanal, Palani, Vedasandur area) with Kanniwadi as their headquarters. After a long war, the small kingdoms under the Pandya kingdom came under the Vijayanagara Empire. It is from here that the plot of Chukunthee continues. In the Nayaka administration, the king followed him in the hierarchy of power, the king of Madurai, Chokanatha Nayak, (1662-1682), one of the generals in the reign of Appayanayakar's son Chinnakatiriyappa Nayak, captured Kanniwadi and became the king of the palace. The training ground of Madurai king's artillery, cavalry and infantry was located in Kanniwadi and so the history of Madurai Nayakkars centres around Kanniwadi.

**Keywords:** Worship, Kanniwadi, Vijayanagara Empire, Madurai king

## முன்னுரை

பண்டுவத் தொழிலைப் பாரம்பரியமாகக் கொண்ட நாவிதர் இனத்தாரின் தனித்த குணநலன்களையும் மருத்துவப் பங்களிப்பினையும் இனவரைவியல் தரவுகளோடு மறைக்கப்பட்ட மானுட வரலாற்றை சுளுந்தீ வெளிக்காட்டுகிறது. வெற்றியும் பெற்றிருக்கின்றது. மேலும், குடும்பர், கள்ளர், நாயக்கர், ஆசாரி, முத்தரையர், செட்டியார், வண்ணார், கவுடா, இடையர் என்று பல்வேறு இனத்தார்களின் குணநலன்களை பதிவு செய்துள்ளது.

## சுளுந்தீ புதினத்தில் தெய்வ வழிபாடு

கன்னிவாடியைத் தலைமை இடமாகக் கொண்டு பன்றிமலையை (கொடைக்கானல், பழனி, வேடசந்தூர் வட்டாரம்) அரசாண்ட வேட்டுவகுல சிற்றரசுக் காலமும் நாவலில் கூறப்பட்டுள்ளன. நீண்ட போருக்குப் பின் பாண்டிய அரசுக்குக் கீழிருந்த சிற்றரசுகள் விஜயநகரப் பேரரசின்கீழ் வந்தது. இங்கிருந்துதான் சுளுந்தீ கதைக்களம் தொடர்கிறது.

நாயக்க அரச நிர்வாகத்தில் மன்னர், அவருக்கு அடுத்து அரண்மனையார் என்ற அதிகாரப் படிநிலையில், மதுரை மன்னர் சொக்கநாத நாயக்கர், (1662-1682) ஆட்சியில் படைத்தளபதிகளில் ஒருவரான பெரிய அப்பயநாயக்கர் மகன் சின்னக்கதிரியப்ப நாயக்கர், கன்னிவாடியைக் கைப்பற்றி அரண்மனையார் பட்டத்திற்கு வந்தார். மதுரை மன்னரின் வெடிப்படை, குதிரைப்படை, காலாட்படைகளின் பயிற்சித்தளம் கன்னிவாடியில் இருந்ததால் மதுரை நாயக்க வரலாறு கன்னிவாடியை மையம் கொண்டே இயங்கியது.

## கதையின் களம்

தெற்கே வைகை அறு பாய்ந்தோடும் குன்னுவராயன் கோட்டை, வடக்கே கரூர் அருகே உள்ள அவரங்குறிச்சி, ரங்கமலை, கிழக்கே திண்டுக்கல் அடுத்துள்ள கரந்தமலை, மேற்கே வராகநதி, மூங்கிலாறு பாய்ந்திடும் தேவதானப்பட்டி இவையெல்லாம்விட, இன்று கொடைக்கானலாக அறியப்படும் செல்வக்களஞ்சியமான பன்றிமலை இவைகளே கன்னிவாடி அரண்மனையின் எல்லை.

## சுளுந்துமரம் - வரலாறு

சுளுந்து மரம் மட்டும் பூமியை விட்டு முளைச்சு வெளியேறி தளைக்கும்போதே வைரமா வெளியேறும். சுளுந்து மரம் கெண்டைக் காலளவுக்கு மேல் பெருக்காது. மலை அடிவாரமும் உச்சியும் இல்லாத இடைப்பட்ட எடத்தில, காக்காபின் தாது மண்வாகுள்ள நெலத்தில் மட்டும் முளைக்கும் வருசக் கணக்கா மழையில்லேன்னாலும் கழுமரம் போல உசுர உள்ளே வச்சிக்கிட்டே இருந்து, மழை பெய்ந்தால் இரண்டாம் நாள் தளைக்கும். இந்தக் குச்சியில எண்ணெய்ச் சத்து இருக்கிறது.

சுளுந்தீக்குச்சியே ஒடிச்சு ஈரப்பதம் உள்ள ஆத்து கருமணல்ல நாற்பது நாலுக்கு மேல் புதைத்து வைத்தால் எலும்பாக மாறும். அந்தக் குச்சி நூனியை கூர்மையாக தேய்த்து, பாறையில் குத்தினாலும் மொன மழுங்காது. இதை வைத்துத்தான் வேட்டை ஆயுதமாக, குழி தோண்டவும், கிழங்கு தோண்டவும் வச்சிருக்கோம்.

பாறமேல் கருநொச்சி, விகுளிச்சாறு புழுஞ்சுவிட்டு, அதில் நெருப்பு மூட்டினால் பாறை விரிவு இந்த மூச்சா விடும். அந்த இடத்தில் அதே சாற்ற பிழிந்து விட்டு பாறை பொளக்கும். பொளந்த இடைவெளியில் சுளுந்தீக்குசியால குத்திப் பாறையைப் பிளக்கலாம்.

அரச காலத்தில் எண்ணெய்த் துணியால் தயாரிக்கப்படும் தீவட்டியைவிட 'சுளுந்து' என்ற மரக்குச்சியே விளக்காகப் பயன்பட்டது. அதனால் சுளுந்து மரக்குச்சிக்கு 'சுளுந்தீ' என்ற பெயர் வந்தது. அதிகப்படியான வெளிச்சத்தைத் தருவதால் 'சுளுந்தீ' என பெயர்க்காரணமானது. பின் அடுப்பு பற்ற வைக்கவும் பயன்பட்டது. கோவில்களில் விளக்காகப் பயன்பட்டது. இன்றும் சுளுந்தீ மரம் மலை அடிவாரக் கிராமங்களில் சுளுந்து மரமே தீவட்டியாகப் பயன்படுகிறது.

## சுளுந்தீ புதினத்தில் சிறுதெய்வங்கள்

ஊருக்கு வடக்கே உள்ள அம்மன் கோயில், (Muthunaagu, 2018), குலதெய்வம் - அழகுமலையான், ராக்காயி (வங்காரனுக்கு), பன்றிமலை சித்தரின்பெருமை, காங்கோபட்டி காமாட்டவ்வா (பின் நாளில் காமாட்சியம்மன், ப.70), ஜக்கமா (பக்.87-88), செங்குளத்து மாடன் (ப. 89), குலதெய்வம் - கம்பிளி (ப.90), ராமன் (பண்டுவன்) குலதெய்வம் செங்குளத்து மாடன் (ப.248), நொச்சி ஓடைக் கன்னிமார், ப.361.

### ஊருக்கு வடக்கே உள்ள அம்மன் கோவில்

அம்மன் கோவிலில் சாமி கும்பிடப் போனார்கள். அம்மன் கோவில் பூசாரி மருதப்ப வேளாளனுக்கு சாமி வந்து ஆடினான். வங்காரன் கழுத்தில் மாலையைப் போட்டு விபூதியை

நெற்றியில் பூசி "ஆத்தா கூடவே இருப்பாடா, பயப்படாம போடா" என அருள்வாக்குச் சொன்னான் (Muthunaagu, 2018).

### குலதெய்வம் - அழகுமலையான் - ராக்காயி

ஆலாத்தி எடுத்து வங்காரனுக்குப் பொட்டு வைத்து, 'அழகு மலையானும், ராக்காயியும்கூட துணையா வருவாக' என்று சொல்லி வழியனுப்பினாள்.

### பன்றிமலைச் சித்தர்

மடிப்பு மடிப்பாக இருக்கும் பன்றிமலைக்குள் பன்றிமலைச் சித்தர் இருப்பார். இதம் மட்டுமே குடிகொண்டிருக்கும் பன்றிமலையில் எங்கும் கிடைக்காத மூலிகைகள் முளைத்து கிடக்கிறது. பல மொழிகள் கற்றவர்.

### காங்கோபட்டி காமாட்டவ்வா (பின்னாளில் காமாட்சியம்மன்)

இப்ப இருக்குற பூசாரியின் தாத்தன் உசுரோட இருந்தப்ப மூங்கிலாத்தில் ஓலை கொட்டன் மிதந்து வந்து அரண்மன ஒரத்து மூங்கில் பொதரில சிக்கிடுச்சு. அதுக்குள்ள இருந்த சின்னக் குழந்த சிரிக்கிறது. சத்தம் கேட்டு வந்து பார்த்தால் பெண் குழந்தை மூனு மாத குழந்த தெய்வ குழந்தை என நினைத்து தூக்கியாந்து அவர்களோட குல தெய்வமான காமாட்டவ்வா பேரு வைச்சு. தன் பெத்த பிள்ளைபோல் வளர்த்தங்க. இந்த காமட்டவ்வா பின் நாளில் காமாட்சியம்மன் எனப் பெயர் மாறிச்சு.

### ஜக்கம்மா

குலநீக்கமான ஆள சாணிக்குழி முன்னால் நிறுத்தி ஜக்கம்மாவைக் கும்பிட்டு பூசாரி சாங்கியம் சொல்லச் சொல்ல, குலநீக்கமானவன் ஒவ்வொரு குழியில் மூங்கி மூங்கி எழுந்திருச்சு. ஆத்துல குளித்து வரிசையா பட்டக்காரங்க ஒவ்வொருத்தரும் காலில் விழுந்து வணங்குவான். பட்டக்காரங்க கையில் வைத்திருக்கும் செருப்பால் காலில் விழுந்தவன் தலையில் அடிப்பாங்க. இது முடிஞ்சா அவன் குலத்துல சேத்துக்குவங்க.

## பண்டைத் தமிழரின் நம்பிக்கைகளும் சகுனங்களும்

பண்டைக்கால முதல் மனிதன் இயற்கையோடியைந்து வாழந்து வருகிறான். கி.பி.5ஆம் நூற்றாண்டைச் சார்ந்த 'ஆசாரக்கோவை' மூலம் பண்டைத் தமிழரின் நம்பிக்கைகளைப் பற்றி அறிகிறோம்.

தொல்காப்பியத்திலே 'நாளும் புள்ளும் பிறவற்றி நிமித்தமும்' என சு. சக்திவேல் மேற்கோள் காட்டியுள்ளார் (Sakthivel, 2014). 'புள்' எனக் குறிப்பிட்டது. முன்னர் பறவையையும் பிற்காலத்தே சகுனங்களைப் பற்றியும் குறிப்பனவாக அமைந்துள்ளதை 'வாய்ப்புள், பறவாப்புள்' எனக் குறிப்பிடுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம். 'அஞ்சுவரு குராஅல் குரலுந் தூற்றும்' (புறம். 280) என சு. சக்திவேல் மேற்கோள் காட்டியுள்ளார் (Sakthivel, 2014).

காகம் கத்தினால் விருந்தினர் வருவர் என்பது அக்கால முதல் இக்காலம் வரை தமிழரிடையே நிலவிவரும் நம்பிக்கையாகும்.

"கூகை அலறினால் சாவு வரும்" என சு. சக்திவேல் மேற்கோள் காட்டியுள்ளார் (Sakthivel, 2014). என்ற நம்பிக்கை பண்டைத் தமிழரிடையேயும் இன்றும் தமிழகத்தில் நிலவி வருவதை அறியலாம்.

ஏதேனும் நல்ல காரியத்திற்குப் புறப்படும்பொழுது காதும் இப்பக்கத்திலிருந்து வலப்பக்கம் செல்லுதல் நல்லது என நம்புகின்றனர். இதனை,

"மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை

அன்புமை மரபினின் கிளையோ டார்" (குறுந்தொகை-39)

என சு. சக்திவேல் மேற்கோள் காட்டியுள்ளார் (ப.191).

தலைவனை எதிர்நோக்கும் தலைவிக்குக் கண் துடித்தால், தலைவன் விரைவில் வருவான் என நம்புகிறாள்.

'நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே' (கலித்தொகை.11)

என சு. சக்திவேல் மேற்கோள் காட்டியுள்ளார் (ப.192).

'நூண்ணேர் புருவத்த கண்ணு மாடும்' (ஐங்குறுநூறு-218)

என சு. சக்திவேல் மேற்கோள் காட்டியுள்ளார் (ப.192).

இரவில் காணும் கனவுகளுக்குப் பலன் கூறுவதை இன்றும் காண்கிறோம்.

நாட்டுப்புற மருத்துவமே (Folk Medicine) பல நாட்டுப்புற நம்பிக்கைகளுக்குத் தாய் ஆகும். நாட்டுப்புற மருத்துவத்தில் நம்பிக்கை குறைந்து மேலை நாட்டு மருத்துவம் ஆதிக்கம் உள்ள சமுதாயத்தில் நாட்டுப்புற மருத்துவம் கூறும் விதிகளும் நடைமுறைகளும் நாட்டுப்புற நம்பிக்கையாயிற்று. நாட்டுப்புற நம்பிக்கைகள் தோன்றிய வரலாற்றைத் தமிழவன் அவர்கள்' (Sakthivel, 2014).

## சத்தியம் செய்தல் நம்பிக்கை

சத்தியத்தை மீறினால் தெய்வ தண்டனை கிடைக்கும் என்று நாட்டுப்புற மக்கள் நம்புகின்றனர்.

'நெடுஞ்சுவர்ப் பல்லியும் பாங்கற் றேற்றம்' (நற்றிணை-246)

என சு. சக்திவேல் மேற்கோள் காட்டியுள்ளார் (Sakthivel, 2014). பச்சோந்தி இடமிருந்து வலம் சென்றால், நல்ல சகுனமாகக் கருதினர்.

## சிலம்பில் முன்னோர் வழிபாடு

அரசனால் தலைக்கோல் சிறப்பும், பேரும் புகழும் பெற்ற மாந்தளிர் போலும், மேனி வனப்புடைய மாதவி, பச்சிளம் குழந்தை ஒன்றைப் பெற்றாள். மாதவி பெற்ற மகளுக்கு நாம் ஒரு நல்ல பெயர் சூட்டுவோம் என்று நினைத்து ஓர் அழகிய பெயரைச் சொல்லுக என்று கேட்டனர் (Sellappan, 1994).

"இடைஇருள் யாமத்து எறிதிரைப் பெருங்கடல்

உடைகலப் பட்ட எம்கோன் முன்நாள்

புண்ணிய தானம் புரிந்தோன் ஆகலின்

இந்திரன் ஏவலின் இங்கு வாழ்வேன்

வந்தேன் அஞ்சல் மணிமேகலை யான்

உன்பெரும் தானத்து உறுதி ஒழியாது

துன்பம் நீங்கித் துயர்க்கடல் ஒழிகென'

விஞ்சையில் பெயர்த்து விழுமம் தீர்த்த

எம்குல தெய்வப் பெயர்ஈங்கு இடுகஎன" (பாடல் 30-40)

'வேட்டி போட்டுத் தாண்டித் தாரேன்

கற்பூரத்தைக் கைபோட்டு அணைச்சித் தாரேன்' என சு. சக்திவேல் மேற்கோள் காட்டியுள்ளார் (Sakthivel, 2014).

சமூகம் வளர்ந்து மாறிய பிறகும் மனித சமுதாயத்தில் இது நாட்டுப்புற நம்பிக்கையாக உள்ளது. 'கண்ணாடி உடைந்தால் கேடு வரும்' நம்பிக்கைகளுக்குரிய தோற்றம் இது.என சு. சக்திவேல் மேற்கோள் காட்டியுள்ளார் (ப.219).

## சிறுதெய்வ வழிபாடு

நாட்டுப்புறத் தெய்வங்களைத்தான் சிறு தெய்வங்கள் என அழைக்கிறோம். குடும்ப தெய்வ வழிபாடும் குல தெய்வ வழிபாடும் ஊர் தெய்வ வழிபாடும் இவற்றில் அடங்கும். வீட்டில் யாரேனும் துன்புற்றாலும் நோய் வாய்ப்பட்டாலும் குடும்ப தெய்வத்திற்குப் பூஜை செய்வர். குடும்ப தெய்வத்தின் பெயரைப் பிள்ளைகட்கு வைப்பர். ஒவ்வொரு சாதியினரும் பல குலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு குலத்திற்கும் ஒரு தெய்வம் உண்டு. இன்றும் நாட்டுப்புறங்களில் அந்தந்த குலத்துத் தெய்வத்துணை எனத் திருமண அழைப்பிதழில் அச்சிடுவதைக் காணலாம். ஒரே குல தெய்வத்தை வழிபடுபவர்கள் அனைவரும் பங்காளிகளாவர்.

'குருவை மறந்தாலும் குலதெய்வத்தை மறவேன்'

'குலதெய்வத்தைக் கும்பிட்டுக் கும்மியடி'

என சு. சக்திவேல் மேற்கோள் காட்டியுள்ளார் (Sakthivel, 2014)

என்பது குல தெய்வ வழிபாட்டின் சிறப்பினைக் கூறுகிறது. சில நேரங்களில் செல்வாக்குமிக்க குலதெய்வம் ஊர்த்தெய்வமாகவும் பின்னர் பல ஊர்த்தெய்வமாகவும் மாறுவதுண்டு.

சிறு தெய்வங்கள் வேதக் கடவுளோடு பெரும்பாலும் தொடர்பு கொள்ளாதவை. முழுமுதற் கடவுளாகக் கருதி வணங்கப்படாதவை. பூசை, திருவிழா முதலியவற்றில் திட்ட வட்டமான வரையறை கிடையாது. பிராமணர் அல்லாதோர் பூசாரியாக இருப்பர். கோவில் போன்ற அமைப்பும் பெரும்பாலும் கிடையாது.

செவிவழிச் செய்திகளும் பரம்பரைக் கதைகளும் உண்டு. அச்சத்தின் காரணமாகவும் வளமைக்காகவும் இயற்கையின் சீற்றம் தணியவும் நாட்டுப்புறத் தெய்வங்களை வழிபடுகின்றனர். சிறுதெய்வங்களில் மாரியம்மன், அய்யனார் போன்றவை பெரும் பாரம்பரிய மரபை (Great Tradition) நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. இதனால் இத்தெய்வங்களை இடைநிலைப்பட்ட தெய்வங்கள் என்று கூறுவர். பிராமணர் பூசாரி, உயிர்ப்பலி இம்மை, திட்டவட்டமான பூசை, திருவிழா, ஆகமவிதிப்படி கோவில், உருவச்சிலையில் மாற்றம் முதலியவற்றால் ஜோஸ்பின் கலா அவர்கள் இடைநிலைப்பட்ட தெய்வங்கள் என்கிறார். இத்தெய்வ வழிபாடுகளை ஆழ்ந்து நோக்கின் ஆரியமயமாகும் தன்மையைக் (Aryanization) காண்கிறோம்.

நாட்டுப்புறங்களில் நாட்டுப்புறத் தெய்வங்கள்தான் அதிகம் உள்ளன. அவர்களது வாழ்வோடு வாழ்வாகப் பின்னிப்பிணைந்து விட்டன. நாட்டுப்புறத் தெய்வங்களே நாட்டுப்புறக் கலைகளின் வளர்ச்சிக்குக் காரணமெனின் மிகையாகாது. தமிழகமெங்கும் மாரியம்மனின் வழிபாடு காணப்படுகிறது.

"ஆருகடன் நின்றாலும் மாரிகடன் ஆகாது

மாரிகடன் தீர்த்தவர்க்கு மனக்கவலை தீருமம்மா"

என சு. சக்திவேல் மேற்கோள் காட்டியுள்ளார் (ப.203).

என்ற நம்பிக்கையை மக்களிடம் காண்கிறோம்.

'ஊருக்கு நேர்கிழக்கே உறுதியுள்ள ஐயனாரே'

'சத்தத்தை நீ கொடய்யா சரளிவிட்டு நான் படிக்க'

என சு. சக்திவேல் மேற்கோள் காட்டியுள்ளார் (ப.226).

மாரியம்மன் வழிபாட்டைப் போன்ற அய்யனார் வழிபாட்டையும் காணலாம். அய்யனார் காவல் காக்கும் தெய்வமாகக் கருதப்படுகின்றார். நாட்டுப்புறத் தெய்வங்களில் வேளாண்மையோடு தொடர்புடைய பெண் தெய்வங்கள் தான் அதிகம். நாட்டுப்புறத் தெய்வங்கள் தங்களுடைய விருப்பங்களையும் நிறைவேற்றப்பட வேண்டிய வேண்டுதல்களையும் தெய்வ நிலைக்குப்பட்ட பூசாரி, அருள்வந்தோர் மூலதாக அறிந்து கொள்கிறார்கள்.

நாட்டுப்புறத் தெய்வங்களை வளமையைக் கொடுப்பனவாகவும் ஆறு, குளம் முதலியவற்றைக் காப்பனவாகவும் கொடிய நோயிலிருந்து காப்பனவாகவும் கால்நடைகளை நோயிலிருந்து காப்பனவாகவும் கிராமத் தெய்வமாகவும் கருதுகின்றனர்.

## நாட்டுப்புறத் தெய்வ வகைப்பாடு

டாக்டர் சு. சக்திவேல் அவர்கள் நாட்டுப்புறத் தெய்வங்களை ஐந்தாக வகைப்படுத்துகிறார். ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள், குல தெய்வங்கள், சாதித் தெய்வங்கள், ஊர்த் தெய்வங்கள்.

டாக்டர் துளசி இராமசாமி அவர்கள் நாட்டுப்புறத் தெய்வங்களை ஆறாக வகைப்படுத்துகிறார். ஊர்த் தெய்வங்கள், இனத் தெய்வங்கள், குல தெய்வங்கள், மாலைத் தெய்வங்கள், சமாதித் தெய்வங்கள், துணைத் தெய்வங்கள்

## வழிபாட்டு முறைகள்

நாட்டுப்புற தெய்வங்களுக்குக் கொண்டாடப்படும் விழாவைத் திருநெல்வேலி மாவட்டத்தில் 'கொடை' என்றும் மற்ற மாவட்டங்களில் 'பொங்கல் வைத்தல்' அல்லது 'சாமி கும்பிடுதல்' என்றும் அழைக்கின்றனர். ஆண் தெய்வங்களுக்கு வெள்ளிக்கிழமையும் பெண் தெய்வங்களுக்குச் செவ்வாய்க்கிழமையும் 'கொடை' நடைபெறும்.

### சிறு தெய்வங்களின் வழிபாட்டு முறைகள்

1. பிறப்பு இறப்பு உள்ளவை
2. குறிப்பிட்ட ஆற்றலுடையவை
3. மனித உணர்வில் தோன்றியவை
4. சில சக்திகளைக் கொண்டவை
5. உயிர்ப்பலி உண்டு.
6. பிராமணர் அல்லாதோர் பெரும்பாலும் பூசாரியாக இருப்பர்.
7. பெரும்பாலும் பெண் தெய்வங்கள்
8. தங்களுக்குள்ளே பகைமையை வளர்க்கும்.
9. பெரும்பாலும் கோயிலமைப்பு இல்லை.
10. சிறு தெய்வங்களில் சைவ, வைணவ வேறுபாடில்லை.
11. அசைவப் பொருட்கள் படைக்கப்படுகின்றன.
12. நாட்டுப்புறத் தெய்வங்களுக்கு செவிவழிச் செய்தி, நாட்டுப்புறக் கதைகள் உண்டு.

தென் தமிழ்நாட்டில் அம்மன் என்பதாக முடியும் பெயர்கள் தமிழ்நாட்டில் வடபகுதியில் 'ஆயி' என்பதாக வழங்கப் பெறுகின்றன. எ.கா. 'குழுமாயி', 'பூமாயி', 'சிலம்பாயி' என்பவற்றைக் குறிப்பிடலாம்.

## முடிவுரை

பண்டுவத் தொழிலைப் பாரம்பரியமாகச் செய்து வரும் நாவிதர் இனம். கன்னிவாடியைத் தலைமையிடமாகக் கொண்டு அரசாளும் அரண்மனையார் என்ற அதிகாரப் படிநிலையில் மதுரை

மன்னர் சொக்கநாத நாயக்கர் படைத்தளபதிகளில் ஒருவரான பெரிய அப்பயநாயக்கர் மகன் சின்னக் கதிரியப்ப நாயக்கர். வெடிப்படை, குதிரைப்படை, காலாட் படைகளின் பயிற்சித் தளம் கன்னிவாடியில் இருந்ததால் மதுரை நாயக்க வரலாறு கன்னிவாடியை மையம் கொண்டே வந்தது. சுளுந்து மரத்தில் இருந்து வரும் தீ சுளுந்தீ ஆகும். பற்ற வைத்தால் வரும் வெளிச்சம், சுளுந்து குச்சி, கழுமரம் போல உறுதிகொண்டவை. சுளுந்தீ புதினத்தில் ஊருக்கு வடக்கே உள்ள அம்மன் கோயில், செங்குளத்து மாடன், கம்பிளி, நொச்சி ஓடைக் கன்னிமார் போன்றவை சிறுதெய்வங்களாக காணப்படுபவை. சிறுதெய்வ வழிபாடு நாட்டுப்புறத் தெய்வங்களைத்தான் சிறு தெய்வங்கள் என அழைக்கிறோம். குடும்ப தெய்வ வழிபாடும் குல தெய்வ வழிபாடும் ஊர் தெய்வ வழிபாடும் இடம்பெறுகிறது. கன்னிவாடியை ஆண்ட நாயக்கர்கள் அரண்மனையார் பட்டத்திற்கு வந்தவுடன் தெய்வ வழிபாடுகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டனர். கன்னிவாடியைத் தலைமை இடமாகக் கொண்டு பன்றிமலையை அரசாண்ட அரண்மனையார். மக்களின் வாழ்விலும் மிகுந்த அக்கரைக்கொண்டு பல வழிபாட்டு முறைகளையும் குல தெய்வமுறைகளையும் அரண்மனையாரும் மக்களும் பின்பற்றி வந்தனர். குறிப்பாக சிறு தெய்வ வழிபாடுகளில் 'சாமியாட்டம்', 'குறுதிப்பலி', 'பலி வடிவங்கள்' ஆகியனவும். சென்னை, செங்கல்பட்டு வட்டாரங்களில் 'காளன்' ஆற்காட்டுப் பகுதியில் 'பொன்னியம்மன்', வேலூர் திருவண்ணாமலைப் பகுதியில் போத்திராஜா கொங்கு நாட்டில் 'அண்ணன்மார்' திருச்சி-புதுக்கோட்டை மாவட்டங்களில் 'காத்தவராயனும்', 'நாடியம்மனும், மதுரை - முகவை மாவட்டங்களில் 'கருப்பசாமி', நெல்லை- குமரி மாவட்டங்களில் 'சுடலை மாடனும் இசக்கியம்மனும்' போன்ற தெய்வங்கள் சிறு தெய்வங்களாக காணப்படுகின்றன.

## References


Muthunaagu, (2018) Sulunthi, Aadhi Publication, Tiruvannamalai, India

Sakthivel, S. (2014) Nattupura Eyal AIvu, Manivasagar Pathippagam, Chennai, India

Sellappan, S. (1994) Silapathikaram, Bharathi Pathippagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License